இன்றைய செய்தி நாளைய வரலாறு

கலைஞர் 100 1924 - 2024

# முரசொலி

Murasoli

www.murasoli.in

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

murasolidaily@gmail.com

தொடக்கம் : 10.8.1942 – முரசு : 84 – ஒலி : 275 – திருவள்ளுவர் ஆண்டு 2057 – வைகாசி 03 – ஞாயிற்றுக்கிழமை 17 மே 2026 – வெளியூர் 8 பக்கங்கள் Established : 10.8.1942 - Volume : 84 - Issue 275 : Thiruvalluvar Year - 2057 - Vaikasi 03 - Sunday 17 May 2026 - Dak 8 Pages ₹ 5.00

## கழகத்தினரை மனதுவிட்டுப் பேச அனுமதித்து

# உடன்பிறப்புகளின் உண்மையான உணர்வினை அறிந்து வந்து சொல்லுங்கள் !

## கள ஆய்வுக் குழுக் கூட்டத்தில் கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் வேண்டுகோள் !






சென்னை அண்ணா அறிவாலயம் கலைஞர் அரங்கில் நடைபெற்ற கள ஆய்வுக் குழுக் கூட்டத்தில் கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் உரையாற்றினார். உடன் சட்டமன்ற எதிர்க் கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின், கழக துணைப் பொதுச் செயலாளர்கள் க.பொன்முடி, ஆ.இராசா எம்.பி., கனிமொழி கருணாநிதி எம்.பி., அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி ஆகியோர் உள்ளனர்.

**சென்னை, மே 17-**

**“கழகத்தினரை மனதுவிட்டுப் பேச அனுமதித்து உடன்பிறப்புகளின் உண்மையான உணர்வினை அறிந்து வந்து சொல்லுங்கள்” என்று கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் கள ஆய்வுக் குழுக் கூட்டத்தில் உரையாற்றும்போது வேண்டுகோள் விடுத்தார்.**

அண்ணா அறிவாலயம் கலைஞர் அரங்கத்தில் நடைபெற்ற கள ஆய்வுக் குழுக் கூட்டத்தில் கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் ஆற்றிய உரை குறித்து தமது சமூக வலை தளத்தில் அவர் பதிவிட்டிருப்பதாவது:-

சட்டமன்றத் தேர்தல் முடிவுகள் குறித்து, 234 தொகுதிகளுக்கும் சென்று கள ஆய்வு செய்ய 38 பேர் கொண்ட குழுவினரை நியமித்திருந்தேன். இன்று அவர்களுடனான சந்திப்பில் இந்த ஆய்வை எப்படி மேற்கொள்வது என, சில முக்கிய அறிவுறுத்தல்களை வழங்கியிருக்கிறேன்.

● நீங்கள் ஒவ்வொருவரும் தலைமைக் கழகத்தின் பிரதிநிதிகளாக, எனது சார்பில் அனுப்பி வைக்கப்படுபவர்கள். எனது காதுகளாகச் செல்பவர்கள்.

● தனிப்பட்ட விருப்பு வெறுப்பின்றி, கட்சிக்காரர்கள் சொல்லும் உண்மையை அப்படியே வந்து என்னிடம் சொல்வது மட்டுமே உங்கள் வேலை.

● நீங்கள் யாரையும் காப்பாற்றவும் முயற்சி செய்ய வேண்டாம். யாரையும் பழிவாங்கவும் எண்ணக் கூடாது.

● இரண்டு பேர் கொண்ட குழுவாகத்தான் யாரையும் சந்திக்க வேண்டும். ஒருவர் மட்டும் தனியாகச் சந்திக்க கூடாது.

● கழகத்தினரை மனதுவிட்டுப் பேச அனுமதியுங்கள். அவர்களின் குறைகளை, தேர்தல் முடிவுகளுக்கான காரணங்களை அவர்கள் கொட்டித் தீர்க்கட்டும்.

● தலைவரான என் மேலேயே குறை சொன்னாலும் பரவாயில்லை. அதைக் குறித்து வைத்து உங்களது அறிக்கையில் வழங்குங்கள்.

● நிர்வாகிகளின் உணர்வு என்ன? அவர்கள் உண்மையில் என்ன நினைக்கிறார்கள்? அது மட்டும்தான் எனக்குத் தேவை.

● டாக்டரிடம் பொய் சொல்லக் கூடாது என்பார்கள். இப்போது நானும் அந்த இடத்தில் தான் இருக்கிறேன். என்னிடம் எதையும் மறைக்காதீர்கள்.

● நோய் என்னவென்று தெளிவாகத் தெரிந்தால்தான் அதற்கு மருந்து கொடுக்க முடியும்.

● கழகத்தினர் உங்களிடம் சொல்லும் தகவல்களை வேறு யாரிடமும் பகிர்ந்துகொள்ளக் கூடாது. குறிப்பாக, சம்பந்தப்பட்ட நபர்களிடம் சொல்லக் கூடாது.

● அப்படி செய்தால் இந்த ஆய்வின் நோக்கமே வீணாகி விடும்.

● பிரச்சினைகளைச் சரி செய்து, நம்மை மாற்றிக் கொண்டால்தான் அடுத்த 100 ஆண்டுகளுக்கு உயிர்ப்போடு இயங்க முடியும்.

● நீங்கள் தரும் அறிக்கையின் அடிப்படையில்தான் கழகத்தில் மாற்றங்கள், சீர்திருத்தங்களைச் செய்யப் போகிறேன்.

● அதனால் scan report போல துல்லியமாக இது இருக்க வேண்டும்.

● ஜூன் 5க்குள் இந்த அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டு, இதன் மீதான நடவடிக்கைகளை ஜூன் மாத இறுதிக்குள் முடித்திட வேண்டும்.

● உடன்பிறப்புகளின் உண்மையான உணர்வினை அறிந்து வந்து சொல்லுங்கள்!

இவ்வாறு கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தமது சமூக வலை தளத்தில் பதிவிட்டுள்ளார்.

---

### இலங்கை நாடாளுமன்றத்தில்

# தி.மு.க. தலைவர் மு.க.ஸ்டாலினுக்கு பாராட்டு!

## “மதவாத சக்திகளுக்கு சிம்ம சொப்பனமாக திகழ்ந்தவர்” என புகழாரம்!

கொழும்பு, மே 17 -

தி.மு.க. தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்களுக்கு, இலங்கை நாடாளுமன்றத்தில் பாராட்டு தெரிவிக்கப்பட்டது.

மு.க.ஸ்டாலின் தலைமையிலான திராவிட மாடல் ஆட்சியில் அனைத்துத் துறைகளிலும் தமிழ்நாடு அபார வளர்ச்சியை கண்டதாக இலங்கை நாடாளுமன்ற உறுப்பினர் ரவூஃப் ஹக்கீம் பாராட்டியுள்ளார்.




இலங்கை நாடாளுமன்றத்தில், ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூஃப் ஹக்கீம் உரையாற்றினார்.

அப்போது பேசிய அவர், உலக அளவில் தமிழ்பேசும் மக்களை ஒன்றிணைத்து அயலகத் தமிழர் தினத்தை அரசு சார்பில் கொண்டாடியவர் தி.மு.க. தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் என்று தெரிவித்தார்.

இலங்கைத் தமிழர்களுக்காக எண்ணற்றத் திட்டங்களை மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைமையிலான அரசு நிறைவேற்றியது என்றும் அவர் கூறினார்.

மதவாத சக்திகளுக்கு சிம்ம சொப்பனமாக விளங்கி, தமிழ்நாட்டை அமைதிப் பூங்காவாக வைத்திருந்தவர் மு.க. ஸ்டாலின் அவர்கள் என்றும் தெரிவித்தார்.

தி.மு.க. ஆட்சியில் தமிழ்நாட்டிற்கு அதிக அளவில் தொழில் முதலீடுகள் வந்ததையும் அவர் பெருமிதத்துடன் குறிப்பிட்டார்.

